CC.No 653/2025
Kandamangalam P.S.
Cr.No. 553/2012

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, விழுப்புரம்.**

முன்னிலை..திரு.க.அரவிந்த் பாரதி. பி.ஏ., பி.எல்.,எல்.எல்.எம்.,

நீதித்துறை நடுவர் எண்.2.

விழுப்புரம்.

2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 20 ம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 653/2025**

<table>
<tr><th>வ.எண்</th><th>விளக்கம்</th><th>:</th><th colspan="2">விவரங்கள்</th></tr>
<tr><td>1</td><td>குற்றமுறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி</td><td>:</td><td colspan="2">காவல் உதவி ஆய்வாளர்,<br>கண்டமங்கலம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 553/2012<br>விழுப்புரம் மாவட்டம்.</td></tr>
<tr><td>2</td><td>எதிரிகளின் பெயர் மற்றும் முகவரி</td><td>:</td><td colspan="2">1. முருகன்/A1 ( 48 /2026),<br>த/பெ. சின்னதம்பி,<br>2. விநாயகமூர்த்தி/A2 ( 43 /2026),<br>த/பெ. சின்னம்பி,<br>இருவரும் பள்ளிக்கூடத்தெரு,<br>குரான்பாளையம்,<br>விழுப்பும்.</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள்</td><td rowspan="2">:</td><td>கைது /சரணடைந்த நாள்</td><td>பிணையில் சென்ற நாள்</td></tr>
<tr><td>A1 மற்றும் A2- 01.10.2012</td><td>A1 மற்றும் A2- 04.10.2012</td></tr>
<tr><td>4</td><td>குற்றம் நடந்த நாள்</td><td>:</td><td colspan="2">30.09.2012</td></tr>
<tr><td>5</td><td>கோப்பில் எடுத்த நாள்</td><td>:</td><td colspan="2">23.05.2025</td></tr>
<tr><td>6</td><td>எதிரிகள் ஆஜராகிய நாள்</td><td>:</td><td colspan="2">07.07.2026</td></tr>
<tr><td>7</td><td>புகார்/ இறுதி அறிக்கை</td><td>:</td><td colspan="2">16.05.2025</td></tr>
</table>

CC.No 653/2025
Kandamangalam P.S.
Cr.No. 553/2012

| | | | |
|---|---|---|---|
| | நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | | |
| 8 | எதிரிகளிடம் பிரிவு 263 BNSS ன் கீழ் வினவப்பட்ட நாள் | : | 07.07.2026 |
| 9 | குற்றவியல் பல்வகை மனுக்கல் தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் அதன் இறுதி உத்தரவின் மேலான மேல்முறையீடு எதுவும் இருப்பின் அந்த நீதிமன்றம் குறித்த விபரம் | : | - |
| 10 | சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை. | : | <table><tr><th>Witness</th><th>Date of Chief</th><th>Date of Cross</th></tr><tr><td>PW-1, 2</td><td>13.07.2026</td><td>Hostile</td></tr><tr><td>PW-3</td><td>16.07.2026</td><td>16.07.2026</td></tr></table> |
| 11 | சான்றுபொருள் | : | இல்லை. |
| 12 | எதிரிகளிடம் பிரிவு 351 BNSS ன் கீழ் வினவப்பட்ட நாள் | : | 20.07.2026 |
| 13 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 20.07.2026 |
| 14 | எதிரிகள் தலைமறைவாக இருந்த நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நாள் | : | ----- |
| 15 | மேல் நீதிமன்றங்களில் | : | ----- |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்ட தடை மற்றும் இறுதி உத்தரவு குறித்த விவரம். | | |
| 16 | எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் | : | 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)-ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவு 324-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| 17 | சட்டப்பிரிவுகள் | : | பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச |
| 18 | தீர்ப்புரை. | : | 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)-ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டு மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரிகளை பிரிவு 271(1)BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு 23.05.2025-ந் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த அரசுகுற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகளின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் MR.H.SUDHARSAN.,B.SC.,B.L., என்பவர் ஆஜராகியும், இதுவரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து 20.07.2026 அன்று இறுதிவிசாரணைக்கு வந்து இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் ஆவணங்களை பரிசீலித்தும் இம்மன்றம் ஆய்ந்தறிந்து வழங்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கில் கடந்த 30.09.2012 ம் தேதி மாலை சுமார் 18.30 மணிக்கு குரான்பாளையம் பள்ளிக்கூடத் தெருவில் உள்ள சாட்சி1 ரவி என்பவரின் வீட்டின் அருகே எதிரிகள் மழைநீர் போகும் பாதையின் குறுக்கே தடுத்தும் அதனால் மழைநீர் குளம் போல சாட்சி1ன் வீட்டின் முன்பு தேங்கியுள்ளதால், சாட்சி2 சிவா என்பவர் 1வது எதிரியிடம் ஏம்பா, இப்படி தண்ணி போற பாதையை தடுத்து தண்ணி குளம்போல தேங்கியுள்ளதால் என் வீட்டு மண்சுவர் ஈரம் காத்துபட்டு

வீணாகிவிடாதா எனக் கேட்டதற்கு டேய் தேவிடியாபையா வக்கலா ஓழி உன் வீட்டான்டையா தடுத்துள்ளேன் என் வீட்டு பக்கம் தானே தடுத்துள்ளேன் என அசிங்கமாக திட்டி கையில் இருந்த கொடுவாக கத்தியால் சாட்சி2 ன் தலையின் பின் பக்கம் வெட்டியும், இனிமே எங்க கிட்ட வச்சிகிட்டா இந்த கொடுவா கத்தியாலே வெட்டி புதைத்திடுவேன் என கொலை மிரட்டல் விடுத்தும், சம்பவத்தை பார்த்து தடுத்த சாட்சி1 ஐ 2 வது எதிரி அவரது கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் வலது சாட்சி1 ஐ பக்கத்தலையில் அடித்தும் அற்பக்காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதன் விளைவாக 1 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2)-ன் கீழும், 2 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கண்டமங்கலம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி இறுதியறிக்கை இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டது. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்காவணங்களின் நகல்கள் பிரிவு 230 BNSS-ன் கீழ் வழங்கி, போதுமான கால அவகாசம் வழங்கி, இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்து, 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)-ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவு 324-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து படித்துக்காட்டி விளக்கி கூறிட எதிரிகள் குற்றவாளி இல்லை என்றார்கள்.

3. அரசுதரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு அரசுதரப்பில் 8 சாட்சிகள் பட்டியலிடப்பட்டுள்ளது. மேற்படி எதிரிகள் தரப்பில் பிரிவு 359 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அதற்கு அரசு தரப்பில் கடும் ஆட்சேபணை செய்யப்பட்டு, மேற்படி சட்ட பிரிவுகள் சமாதானமாக செல்ல கூடிய வழக்கு இல்லாத காரணத்தினால் அது இந்நீதிமன்றத்தல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அ.சா.1 (புகார்தாரர்) மற்றும் அ.சா2 (கண்ணுற்ற சாட்சி) விசாரிக்கப்பட்டு, பட்டியல் சாட்சியான 3 முதல் 8 வரையான சாட்சியங்களை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் பிரிவு 330 BNSS வின் படி மனு தாக்கல் செய்து, எதிரிகள் தரப்பில் மருத்துவ ஆவணங்களின் உண்மை தன்மையை சந்தேகம் இல்லை என கூறியதால் எதிரிகள் தரப்பில் ஆட்சேபணையின்றி மருத்துவ

ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு அரசு தரப்பில் பிரிவு 348 BNSS-ன் மனுவின் மூலம் அ.சா.3 கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன மற்றும் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்:**

கடந்த 01.10.2012 ஆம் தேதி பகல் 14.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிய சந்துரு என்பவர் நிலையம் பொறுப்பில் இருந்தபோது அசா1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை (அ.த.சா.ஆ 1) பெற்று நிலையக் குற்ற எண்.553/2012 பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை (அ.த.சா.ஆ 2) பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு அன்றைய தினமே மாலை 16 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் (அ.த.சா.ஆ 3) மற்றும் மாதிரி வரைபடம் (அ.த.சா.ஆ 4) தயார் செய்துள்ளார் என்றும், பின்பு சாட்சிகளை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயமடைந்த அசா1 மற்றும் அசா2 க்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரணை செய்து விபத்து பதிவேடுகளுடன் கூடிய காயச்சான்றிதழ்களை (அ.த.சா.ஆ 5 மற்றும் அ.த.சா.ஆ 6) பெற்று விசாரணையை முடித்து எதிரிகளின் மீது பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதச படி இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.** இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகளான 1, 2 மற்றும் கூடுதல் சாட்சியாக அசா3 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட நிலையில் அவர்களின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த விஷயங்களை தொகுத்து பிரிவு 351 BNSS-ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு என்பதாக மறுத்துள்ளார்கள்.

எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. தீர்வுக்குரிய பிரச்சனை

இவ்வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

6.1 இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது நீதிமன்ற விசாரணையில் கடந்த 30.09.2012 ஆம் தேதி மாலை 6.30 மணியளவில் அவரது வீட்டின் முன்பே கூட்டமாக இருந்ததாகவும், அதை வேடிக்கை பார்க்க சென்ற அவரையும், அசா2 யும் கூட்டத்தில் இருந்தவர்கள் யாரோ தகாத வார்த்தைகளால் பேசி ஆயுதங்களால் தாக்கி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், சந்தேகத்தின் பேரில் எதிரிகளின் மீது கண்டமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்ததாகவும், தற்போது எதிரிகள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக சாட்சியம் அளித்து அரசுதரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

6.2 இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியாக அசா2 விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது நீதிமன்ற விசாரணையில் கடந்த 30.09.2012 ஆம் தேதி மாலை 6.30 மணியளவில் அசா1 வீட்டின் முன்பே கூட்டமாக இருந்ததாகவும், அதை வேடிக்கை பார்க்க சென்ற அவரையும், அசா1யும் கூட்டத்தில் இருந்தவர்கள் யாரோ தகாத வார்த்தைகளால் பேசி ஆயுதங்களால் தாக்கி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், சந்தேகத்தின் பேரில் எதிரிகளின் மீது கண்டமங்கலம் காவல் நிலையத்தில் அசா1 புகார் கொடுத்திருந்தார் என்றும், தற்போது எதிரிகள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக சாட்சியம் அளித்து அரசுதரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

6.3 அ.சா.3 இவ்வழக்கில் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றிய சந்துரு என்பவரின் கையெழுத்தும், கையொப்பமும்

அசா3 க்கு நன்கு தெரியும் என்பதால் அவர்கள் தயாரித்து வைத்த கோப்புகளின் அடிப்படையிலும், அவர்கள் விசாரணை செய்ததை பொறுத்தும் மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பொறுத்து சாட்சியம் அளித்துள்ளார்.

7. மேற்படி வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் சம்பவதன்று 1வது எதிரி தான் அசா1ஐ ஆபாசமான வார்த்தைகளால் திட்டியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், 1 மற்றும் 2 எதிரிகள் அசா1 மற்றும் அசா2 ஐ கொடுவாள் கத்தியாலும், இரும்பு பைப்பாலும் தாக்கியதாகவும் சாட்சியம் அளிக்காத நிலையில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையாவண்ணம் உள்ளது. மேலும், இவ்வழக்கில் சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்பட்டும் கொடுவாள் கத்தி மற்றும் இரும்பு பைப்பை கைப்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

8. மேற்கண்ட பரிசீலணையிலிருந்து அரசுதரப்பில் இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் தான் கடந்த 30.09.2012 ம் தேதி மாலை சுமார் 18.30 மணிக்கு குரான்பாளையம் பள்ளிக்கூடத் தெருவில் உள்ள அசா1 அவரது வீட்டின் அருகே எதிரிகள் மழைநீர் போகும் பாதையின் குறுக்கே தடுத்தும் அதனால் மழைநீர் குளம் போல அசா1ன் வீட்டின் முன்பு தேங்கியுள்ளதால், அசா2 ஆனவர் 1வது எதிரியிடம் ஏம்பா, இப்படி தண்ணி போற பாதையை தடுத்து தண்ணி குளம்போல தேங்கியுள்ளதால் என் வீட்டு மண்சுவர் ஈரம் காத்துபட்டு வீணாகிவிடாதா எனக் கேட்டதற்கு டேய் தேவிடியாபையா வக்கலா ஓழி உன் வீட்டான்டையா தடுத்துள்ளேன் என் வீட்டு பக்கம் தானே தடுத்துள்ளேன் என அசிங்கமாக திட்டி கையில் இருந்த கொடுவாக கத்தியால் அசா2ன் தலையின் பின் பக்கம் வெட்டியும், இனிமே எங்க கிட்ட வச்சிகிட்டா இந்த கொடுவா கத்தியாலே வெட்டி புதைத்திடுவேன் என கொலை மிரட்டல் விடுத்தும், சம்பவத்தை பார்த்து தடுத்த அசா1ஐ 2வது எதிரி அவரது கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் வலது பக்கத்தலையில் அடித்தார்கள் என்ற குற்றச்சாட்டு குறித்து தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. எனவே, அரசுதரப்பில் 1 மற்றும் 2 எதிரிகளின் மீது

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்ய தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. இவ்வழக்கின் விசாரணை முடிவாக, எதிரிகள் மீதான மேற்படி குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமின்று நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)-ன் கீழும், 2 வது எதிரி மீது இதச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை பிரிவு 271(1)BNSS-ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

10. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை

இந்தத் தீர்ப்புரை 20.07.2026 ந் தேதி என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, அவையறிய திறந்த நீதிமன்றத்தில் என்னால் பகரப்பட்டது.

G ARAVIND BHARATHI
Digitally signed by G ARAVIND BHARATHI
Date: 2026.07.20 19:37:34 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**விழுப்புரம்.**

**இணைப்புப் பட்டியல்**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.ரவி. | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.சிவா. | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.ஜெயகணேஷ். | கூடுதல் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 01.10.2012 | புகார் | அ.சா1 |
| அ.த.சா.ஆ.2 | 01.10.2012 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா3 |
| அ.த.சா.ஆ.3 | 01.10.2012 | பார்வை மகசர். | அ.சா3 |

| | | | |
|---|---|---|---|
| அ.த.சா.ஆ.4 | 01.10.2012 | வரைபடம். | அ.சா3 |
| அ.த.சா.ஆ.5 | 02.10.2012 | திரு.ரவி என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ். | அ.சா3 |
| அ.த.சா.ஆ.6 | 02.10.2012 | திரு.சிவா என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ். | அ.சா3 |

அரசு தரப்பு குறியிடப்பட்ட சான்றுப்பொருள்- இல்லை

எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி பட்டியல்- இல்லை

எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களின் பட்டியல் -இல்லை

G ARAVIND BHARATHI Digitally signed by G ARAVIND BHARATHI Date: 2026.07.20 19:37:45 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**விழுப்புரம்.**

**பின்குறிப்பு-**

1.இவ்வழக்கில் எந்த சாட்சியும் விசாரணை காலத்தில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2.தீர்ப்பு நகல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

3.விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.